திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட சு.பொலக்குணம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் சட்டபேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கலந்து கொண்டு பொது மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். ஒன்றியச் செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம், ஊராட்சிமன்ற தலைவர் குப்புஜெயக்குமார், கிளைகழக செயலாளர்கள் ஜெயபால், ரவீந்திரன், கார்த்திகேயன், ராமன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பிரகாஷ், கிளை கழக பொருளாளர் பாலு, ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் முருகன், மாணவரணி துணை அமைப்பாளர் மதுரை பாண்டியன், காசிவேல், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனார்.

## புதுக்கோட்டையில் கிராம சபைக் கூட்டம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி பங்கேற்பு

புதுக்கோட்டை, அக்.5- புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 02.10.2023 அன்று கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஐ.சா. மெர்சி ரம்யா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. நா.கவிதப்பிரியா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, முனசந்தை ஊராட்சி மன்றத் தலைவர் சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பட்டாபிராமில் சர்வதேச துப்பாக்கி சுடும் தனியார் பயிற்சி பள்ளியை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்து இந்திய அளவில் துப்பாக்கி சூடு போட்டியில் தேர்வு செய்யப்பட்டுள்ள இரண்டு வீரர்களுக்கு வாழ்த்துகள் தெரிவித்தார். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுக்குத்தை கே.ஜெ.ரமேஷ், மாநகர பொறுப்பாளர் சண்பிரகாஷ், பகுதி செயலாளர் பொன்.விஜயன், துப்பாக்கிச் சூடும் பயிற்சி ஆசிரியர் நாகேந்திர பாபு, வட்ட செயலாளர் ராஜலிங்கம், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்கள் அணுவர்ஷினி, ஹரிகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

### ஒன்றிய அரசின் புதிய மருத்துவக் கல்லூரி கொள்கையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

# முதல்வரின் மருத்துவ திட்டங்களுக்குப் பாராட்டு!

### தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக மருத்துவ அணி தீர்மானம்!

கரூர், அக். 5 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மருத்துவ திட்டங்களுக்கு தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் பாராட்டு தெரிவித்துள்ளது. மசோதாவை கிடப்பில் போட்டுள்ள எதேச்சாதிகாரத்தை கண்டித்து கவர்னர் மாளிகையை முற்றுகையிடும் போராட்டம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் மருத்துவ சேவை அணி மாநில செயற்குழு கூட்டம் கரூர் பசுபதிபாளையத்தில் நடைபெற்றது. இதன் தலைவர் பேராசிரியர் முனைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். கரூர் மாவட்ட தலைவர் சாகுல் ஹமீது வரவேற்று பேசினார். மாநில பொதுச்செயலாளர் ஹாஜா கனி, அப்துல் சமது (எம்.எல்.ஏ), சபி யுல்லாஹ் கான், கோவை உமர், சம்சுதீன், முஸ்தபா, பாரூக் அப்துல்லா, ஜிஃப்ரி காசிம், நூர் தீன், அப்துல் ரஹீம், மருத்துவ சேவை அணி நிர்வாகிகள் கலீல் ரகுமான், அப்துல் ரபி, கதிர், பதேகான், பௌஜூல் ஹசன், ஜாகிர் உசேன், ரசூல் மைதீன், ஷேக் அமானுல்லா, பத்ருதீன், சையது அபுதாஹிர், அன்சாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும், தாய் சேய் பரிசு பெட்டகத் திட்டம் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேர திட்டம், 108 அவசர ஊர்தி சேவை, 104 மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம், 102 இலவச தாய் சேய் நல ஊர்தி திட்டம், 155377 இலவச அமரர் ஊர்தி சேவை திட்டம் போன்ற புதிய மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்களை வரவேற்பது, இதற்காக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வது.

மேற்கண்ட திட்டங்களின் பயன்கள் தனியார் மருத்துவமனைகளிலும் செயல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

அண்ணா பிறந்தநாளில் சிறைகளில் சுமார் 20 ஆண்டுகளாக ஆயுள் தண்டனை அனுபவித்து வருவோரை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம். இதனை ஏற்று தமிழ்நாடு அரசு 49 நீண்ட கால சிறைவாசிகளை விடுதலை செய்ய ஆளுநருக்கு பரிந்துரை செய்தது. ஆனால் ஏறத்தாழ ஒரு மாதம் ஆகியும் ஆளுநர் இருந்த கோப்புக்கு ஒப்புதல் தராமல் காலம் கடத்தி வருகிறார். ஆளுநரின் இந்த எதேச்சதிகார நடவடிக்கையைக் கண்டித்து சென்னை கிண்டி ஆளுநர் மாளிகையை வரும் அக்டோபர் 26 ஆம் தேதி முற்றுகையிட உள்ளோம்.

எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் ஆளுநரை பயன்படுத்தி அம்மாநில ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மத்திய அரசை வன்மையாக கண்டிக்கிறோம். பா.ஜ.க. கூட்டணியில் இருந்து அ.தி.மு.க. வெளியேறியது வரவேற்கத் தக்கது. என்றாலும் எத்தனை நாட்களுக்கு இது நீடிக்கும் என்பது கேள்விக்குறியே.

மேலும் இஸ்லாமியர்களுக்கு எதிரான குடியுரிமை திருத்த சட்டம் உள்ளிட்ட பல சட்டங்களை அ.தி.மு.க. வின் வாக்குகளை பெற்றுத் தான் ஒன்றிய அரசு சட்டமாக நிறை வேற்றி உள்ளது. அ.தி.மு.க. கொள்கை என்ன என்பது புரியாத புதிராக இருக்கிறது. பா.ஜ.க. கூட்டணியில் இருந்து ஒவ்வொரு கட்சியாக வெளியேறி வருவது தேசிய ஜனநாயக கூட்டணி வலுவிழந்து வருகிறது என்பதை காட்டுகிறது என்றார்.

இந்திய அளவில் இளைஞர்களுக்கான போட்டியில் 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் மற்றும் ஈட்டி எறிதல் போட்டிகளில் கலந்துகொண்டு இரண்டு தங்கப்பதங்களுக்கு வென்ற திருத்தணி நகரத்தை சேர்ந்த புகழேந்தி விளையாட்டு வீரருக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மண்டல பொறுப்பாளரும் மாநில இளைஞரணி துணை செயலாளருமான ப.அப்துல்மாலிக் ஆகியோர் ஊக்கத்தொகை வழங்கி பாராட்டினார்கள் அருகில் ஒன்றிய கழக செயலாளர் சி.ஜெ.சீனிவாசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.மோதிலால், டி.எம்.சுகுமார், டி.கே.பாபு, மாவட்ட பிரதிநிதி அசோக்குமார் உள்பட பலர் உள்ளனர்

### சென்னையில் நடைபெற உள்ள மகளிர் உரிமை மாநாட்டில்

# திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகம் சார்பில் பெருந்திரளாக மகளிர் கலந்து கொள்வீர்!

### ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ வேண்டுகோள்!

திருவள்ளூர், அக்.05 - திருவள்ளூர் மத்திய மாவட்ட மகளிர் அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் திருவேற்காட்டில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜ் தலைமை தாங்கினார் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சங்கீதாசீனிவாசன் மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கு. தமிழ்ச்செல்வி ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள். தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜே.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட நிர்வாகிகள் எஸ். ஜெயபாலன், பா.நரேஷ் குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ் ஜி. ராஜேந்திரன் கு. விமல்வர்ஷன். வி.குமார், ஜெ.மகாதேவன், எஸ்.காஞ்சனா சுதாகர் நகர செயலாளர் என்.இ.கே. மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திரு வள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது :

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ் நாடு தளபதி தலைமையில், திமுக மகளிர் அணி சார்பில் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் அக்.14 ஆம் தேதி மகளிர் உரிமை மாநாடு நடக்க உள்ளது. இதில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயல் தலைவர் சுப்ரியா சுலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சுபாஷினி அலி, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ஆனி ராஜா உள்ளிட்ட இந்தியா கூட்டணியின் பல்வேறு முக்கிய தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

பெண்உரிமை போற்றும் இந்த மாநாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக மகளிர் அணியினர் மட்டுமின்றி, உள்ளாட்சி பிரதிநிதிகள், சேர்மன்கள், வார்டு உறுப்பினர்கள், கழகம் மற்றும் கழக அணிகளில் உள்ள மகளிர் கட்டாயமாக கலந்துகொள்ளவேண்டும்

மற்றும் மகளிர் உரிமை மாநாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்ட மகளிர் அணி சார்பில் ஆயிரக்கணக்கானோர் பெண்கள் கலந்து

கொள்ள ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

2024 நாடாளுமன்ற தேர்தலையொட்டி தலைமை கழகம் அறிவிக்கும் வேட்பாளரை திருவள்ளூர் மத்திய மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டரணி சார்பில் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி ஆகிய இடங்களில் கழக நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணிக்காக தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டு அதற்கான பணிகளை உடனடியாக செய்திட வேண்டும்.

பள்ளிக் குழந்தைகளுக்கு அரசு பள்ளியில் காலை சிற்றுண்டி வழங்கிய தாய் உள்ளம் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சருக்கு தமிழ்நாட்டில் உள்ள பெண்களுக்கு மகளிர் உரிமை ஆயிரம் ரூபாய் வழங்கியதற்கும் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மனமார்ந்த நன்றியும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய நகர பேரூர் பகுதி கழக செயலாளர்கள் பேபிசேகர், ஜி. நாராயணபிரசாத், பொன். விஜயன், புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன், டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், ஜி.ஆர்.திருமலை, தங்கம் முரளி, தி.வே.முனுசாமி, நிர்வாகிகள் ஏ.ஜெ.பவுல், உ. வடிவேல், வி.தியாகராஜன், ஜெ.சரவணன், ஜேக்கப், தணிகாசலம், குமரேசன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன் நகர மற்றும் மண்டல குழு தலைவர்கள் அமுதா பேபி சேகர்,ஜோதிலட்சுமி, உஷா ராணி ரவி, பரமேஸ்வரி கந்தன், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் உதயா, வாணிஸ்ரீ, ரமணி, மீனாட்சி ஜெய்சங்கர், ஸ்டெல்லா, பேபிஸ்ரீ, க.சரளா, கெஜலட்சுமி, சாந்திஜனார்த்தன், கோ. கோபிகா, கவிதா சுரேஷ் மாவட்ட மகளிர் தொண்டர் அணி, கௌரி கஜேந்திரன், என்.லட்சுமி, வி.சுமதி, பவானி முத்து, ரேவதி, வாசுகி, காஞ்சனா, வரலட்சுமி, இந்திரா குணசேகரன், அமலேஷ்வரி , பி.எல்.ஆர். தேவியோகா, உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### திருவொற்றியூர் நகரக் கழக முன்னாள் அவைத்தலைவர்

# கே.பரசுராமன் 31வது நினைவு நாள் - நல உதவிகள்!

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ தலைமையில் - கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்கினார் - கே.பி.சொக்கலிங்கம் வரவேற்பு!

சென்னை, அக்.5- கலைஞர் அவர்களின் முரட்டு பக்தனாக வாழ்ந்து எங்களுக்கெல்லாம் கழக உணர்வை ஊட்டி வளர்த்தவர், கழகமே உயிர் மூச்சாய் இறுதி வரை வாழ்ந்தவர், முன்னாள் திருவொற்றியூர் நகரக் கழக அவைத்தலைவர், மூன்று முறை நகராட்சி மன்ற உறுப்பினர் தியாகச்சுடர் கே.பரசுராமன் அவர்களின் 31 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி கே.வி.கே.குப்பத்தில் உள்ள தியாகச்சுடர் கே.பரசுராமன் நினைவு கலையரங்கம் அருகில் வட்டக் கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி. சொக்கலிங்கம் வரவேற்பில், கழக மீனவர் அணி துணைத் தவலைர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கலந்து கொண்டு தூய்மைப் பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள், ஏழை எளியோருக்கு நலத் திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கினார்.

நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி. இராமநாதன், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.முருகேசன், பரந்தாமன், மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ். நாகலிங்கம், மு. துணை செயலாளர் இ.ரமேஷ், மத்திய பகுதி அவைத்தலைவர் வா.முத்து சாமி, துணைசெயலாளர் துர்கா கோதண்டம், வட்டக் கழக செயலாளர்கள் இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன், எம்.எல்.சரவணன், மு.மாணிக்கவேலன் மாமன்ற உறுப்பினர்கள் சாமுவேல் திரவியம், ஆர்.ஜெயராமன், கவி கணேசன், பானுமதி சந்தர், கோமதி சந்தோஷ் குமார், தலைமை கழக சொற்பொழிவாளர்கள் எழும்பூர் கோபிநாத், வாசு.கருணாநிதி, மதிமுக நகர செயலாளர் ரகுநாத், நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.பி.துரை, தமிழர் பாரதம் நிறுவனர் தேவராஜ், மாவட்ட பிரதிநிதிகள் பி.எஸ். சைலஸ், கே.கார்த்திகேயன், எஸ்.ஸ்டாலின், குட்டி (எ) எத்திராஜ், எஸ்.மகேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.தியாகராஜன், துணைத் தலைவர் பிரட் சுரேஷ், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கு.தமிழ்மணி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர்கள் பால உமாபதி, இளஞ்செழியன், சுதர்சனம், மாவட்ட அயலக அணி துணை செயலாளர்கள் சன் பிராபாகரன், தயானந்த ராஜ் (எ) கார்த்திக், டைட்டஸ் செல்வின்,

மாவட்ட ஆதி திராவிடர் நல உரிமைப்பிரிவு துணை அமைப்பாளர் ஜெகன், இராயபுரம் சு.சேகர், பண்ணை சந்திரசேகர், புழல் ஜெகதீசன், கொசப்பூர் ரவிச்சந்திரன், வி.கே.ஏழுமலை, ஆர்.விவேகானந்தன், கே.தேசிங்கு, எம். தயாநிதி, ந.ஜெயசங்கர், விமல் தாஸ், எஸ்.கே.இளங்கோ, டி.அல்லிமுத்து, ஜி.இளங்கோ, கலைஞர் நகர் பாபு, கலை கே.சரவணன், எம்.எஸ்.ரவி, கே.எஸ்.ஆனந்தன், டைலர் மணி, ஏ.பி.சி.உசிலைவேந்தன், கருணாநிதி, தயாளன், பிரேம் குமார், விஜயராகவன், மீனவரணி குமரன், தேசப்பன், எம்.எல். வேலன், ராஜா, ரஜினி, மதுரை முத்து, ஜோதி, இளைஞர் அணி வி.குமார், கிறிஸ்டோபர் ராயப்பன், சோமசுந்தரம், மாணவரணி ஆர். பாலச்சந்தர், சின்னசேக்காடு மு.வசந்தராஜ், திவாகர், பொறியாளர் அணி எஸ்.முகுந்த குமார்,

சிறுபாண்மை அணி யாபேஸ் ஜார்ஜ், சாலை சுரேஷ், மணலி சுரேஷ், கொள்கை மணி, இராமநாதபுரம் பஞ்சாட்சரம், நந்தகுமார், இமானுவேல், ரவி, சின்ன எர்ணாவூர் கோவிந்தசாமி, பகுதி சரவணன், பாரதியார் நகர் பாஞ்சாலி ராஜன், பீட்டர், லோகு, வில்சன், பி.டி.சி. சண்முகம், இப்ரகிம் பாய், ஆட்டோ ராஜவேல்

மகளீரணி ராதா தங்கவேல், புனிதா கனகராஜ், ஹேமலதா, ஜெயா, சந்திரலேகா, சௌந்தர், அன்பரசன், பூலான், குகன், சாத்தாங்காடு முருகேசன், அன்பரசன், இரா.கணேசன், எ.பி.நாகராஜ், பாபா செந்தில், அப்பு, பரணிகுமார், டிக்டாக் சிவா, சீதாராமனன், அன்னை சிவகாமி நகர் ரவி, கே.எஸ்.துரை ராஜ், எம்.ராஜா, பி.மணி, ஆர்.முரளி, நெட்டுக்குப்பம் சுமன், கே.அடைக்கலம், கே.சுப்பிரமணி, கபடி குமார், அன்புச்செல்வம், ஜோசப், ராமகிருஷ்ண நகர் ராஜசேகர், அம்பேத்கர் நகர் முத்து, வடக்கு பாரதியார் நகர் ஸ்ரீகாந்த், புலி விநாயகம், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அ.தமிழ்இன்பன் மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### து.ப. அழகமுத்து

### அக்டோபர் 5 (1987)



பழம்பெரும் சுயமரியாதை இயக்க செயல்வீரரும் – திருச்சி மாவட்டத்தில் கழகத்தை கட்டி வளர்த்த ஆரம்பகால தலைவர்களில் ஒருவர்.

1962ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும் – தி.மு.கழக அரசில் அரசு கொறடாவாகவும் பணியாற்றியவர்.

1952 முதல் 1955 வரை ஊராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்.

1955ல் கருப்புக் கொடி போராட்டத்தில் கலந்து கொண்டவர். 1964ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

கழக நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. மூர்த்தி

### அக்டோபர் 5 (2001)

மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

சட்டக் கல்லூரியில் பயிலும் போதே கழகத்தில் இணைந்து பணியாற்றியதோடு, வேலூர் மாவட்ட அவைத்தலைவராக பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் பேரூராட்சி தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.